# பத்திரிக்கைச் செய்தி

## பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.2,500/- லஞ்சம் கேட்டு பெற்ற கிராம நிர்வாக அதிகாரி கைது

புகார்தாரர் திரு.ஜெயராமன், இருந்தை கிராமம் உளுந்தூர்பேட்டை தாலுகா, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர் தான் புதிதாக வாங்கிய நிலத்திற்கு தனது மகனின் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய இருந்தை கிராம நிர்வாக அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.கலையரசன், கிராம நிர்வாக அதிகாரி, இருந்தை கிராமம், புகார்தாரரின் விண்ணப்பத்தினை பரிந்துரை செய்ய தனக்கு லஞ்சமாக ரூ.2,500/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கள்ளக்குறிச்சி பிரிவில் புகார் மனு கொடுத்துள்ளார். இப்புகார் மனு சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 05.09.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.கலையரசன், கிராம நிர்வாக அதிகாரி, புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.2,500/-யை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார்.